DEPOSITION OF WITNESS
(Chapter XX Code of Criminal Procedure)
IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT JUDGE, SALEM.
**அமர்வு வழக்கு எண்.302/2015**

Deposition of :PW - 17

| | | |
|---|---|---|
| Name | : திரு. முகமது ஹாஜி | Caste: |
| Father's Name: | திரு. முகமது ஹனிபா | Calling: |
| Village | : | Religion: |
| Taluk | : | Age: |
| Date | : | |

Thiru. G. Sri Rama Jeyam, B.L., மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிபதி, அவர்கள், Solemnly affirmed by Tmt.A.G.Mohanasundari, Translator of this court in accordance with the provisions of Oath Act 44/1969, this the 16th day of August - 2023.

**A1 and A3 to A6 present.**

**16.08.2023.**

**முதல் விசாரணை**

நான் சேலம் கிச்சிப்பாளையத்தில் வசித்து வருகிறேன். நான் Two wheeler மெக்கானிக்ஷாப் வைத்திருக்கிறேன். ஆஜர் எதிரிகளை தெரியாது. இந்த வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரித்தார்கள். எனக்கு சொந்தமாக Honda unicorn என்ற இருசக்கர மோட்டார்சைக்கிளை போலிசார் ஒரு கொலை வழக்கில் சம்மந்தப்பட்டிருப்பதாக கைப்பற்றி கொண்டு என்னையும் காவல் நிலையத்திற்கு அழைத்து சென்று விசாரித்தார்கள். அந்த காவல்நிலையம் அரியானூரில் விநாயகாமிஷன் மருத்துவமனைக்கு அருகில் இருக்கிறது.

அந்த வாகனத்தில் பதிவு எண் தற்போது நினைவில்லை. அது நடந்து 8 ஆண்டுகள் ஆகிறது. அந்த வாகனத்தை இப்போது வரை நான் பெற்றுக்கொள்ளவில்லை. போலிசாரிடம் தான் இருக்கிறது. வாகனத்தின் RC புத்தகத்தையும் அவர்களிடம் ஒப்படைத்துவிட்டேன். இந்த வழக்கு சம்மந்தமாக எனக்கு

வேறு எதுவும் தெரியாது.

(சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி கு.வி.செய்ய அரசு தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொணடதற்கிணங்க அனுமதி வழங்கப்பட்டது)

<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>

இவ்வழக்கின் 2ஆம் எதிரி கிச்சிப்பாளையத்தை சேர்ந்தவர் என்றும், அவர் நீண்டகாலமாக அவரது மோட்டார்சைக்கிளை எனது ஒர்க்ஷாப்பில் தான் ரிப்பேர் செய்வதற்கு விடுவார் என்றும், எனவே அவர் எனக்கு நன்கு பழக்கமானவர் என்றும், 2ஆம் எதிரி ஒரு Yamaha RX 100 வாகனம் வைத்திருந்தார் என்றும், அது ரிப்பேர் ஆகும்போதெல்லாம் நான் என்னுடைய யமாஹா வாகனத்தை அவரது உபயோகத்திற்கு கொடுப்பேன் என்றும், 26.11.2014 தேதிக்கு சுமார் 4 மாதங்களுக்கு முன்பாக 2ஆம் எதிரிக்கு சொந்தமாக வாகனம் ரிப்பேர் ஆகிவிட்டதால் நான் எனக்கு சொந்தமான PY 01 Z 7877 என்ற பதிவெண் கொண்ட Honda unicorn வாகனத்தை அவரது உபயோகத்திற்காக கொடுத்திருந்தேன் என்றும் போலிசார் விசாரணையில் சொல்லியிருக்கிறேன்.

அந்த வாகனத்தை கிருபாகரன் ஆகஸ்ட், செப்டம்பர், நவம்பர் –2014 இல் வைத்து ஓட்டி வந்ததாகவும் நான் போலிசார் விசாரணையில் சொல்லவில்லை. 2 அல்லது 3 தினங்களுக்கு தான் கொடுப்பேன் என்று சாட்சி சொல்லுகிறார். போலிசார் என்னை விசாரணை செய்வதற்கு ஒரு மாதத்திற்கு முன்பாக 2ஆம் எதிரி கிருபாகரன் TN54J 8555 என்ற பதிவெண் கொண்ட மெரூன்கலர் Honda Activa வாகனத்தை சொந்தமாக விலைக்கு வாங்கினார் என்று நான் போலிசார் விசாரணையில் சொல்லவில்லை. அதன் பிறகு எனது Unicorn வாகனத்தை என்னிடம் திரும்ப கொடுத்துவிட்டார் என்று நான் போலிசார் விசாரணையில் சொல்லவில்லை.

10.11.2014 அன்று கிருபாகரன் அவரது மேற்படி Activa வாகனத்தை எனது கடையில் சர்வீஸ்ற்கு விட்டதாகவும், சிறிது நாட்கள் கழித்து அதனை எடுத்துக்கொள்வதாக அவர் என்னிடம் சொன்னார் என்றும் நான் போலிசார் விசாரணையில் சொல்லியிருக்கிறேன். Extra பிட்டிங் செய்வதற்காக கொடுத்திருந்தார்.

அந்த வாகனத்தின் பதிவு எண் நினைவில்லை. 26.11.2014 அன்று போலிசார் எனது கடைக்கு வந்தார்கள். போலிசாருடன் சேலம் டவுன் கிராம நிர்வாக அலுவலரும் அவரது உதவியாளரும் வந்திருந்தார்கள். அவர்களுடன் கிருபாகரன் எனது கடைக்கு வரவில்லை.

அப்போது போலிசார் எனக்கு சொந்தமான மேற்படி Honda unicorn வாகனத்தை விசாரணைக்காக கைப்பற்றிகொண்டார்கள். போலிசார் கிருபாகரனுக்கு சொந்தமான மேற்படி Honda Activa வாகனத்தையும் கைப்பற்றி கொண்டார்கள். அதற்காக போலிசார் மகஜர்கள் எழுதிக்கொண்டு அதில் சாட்சியாக கிராமநிர்வாக அலுவலர் மற்றும் அவர் உதவியாளரிடம் கையொப்பம் பெற்றுகொண்டார்கள் என்றால் சரியல்ல. எனக்கு 2 ஆம் எதிரி கிருபாகரன் நல்ல பழக்கம் என்பதால் பகுதி உண்மையை சொல்லிவிட்டு எதிரிகளை வழக்கில் இருந்து காப்பாற்றுவதற்காக மீதி சங்கதிகளை மறைத்து பொய் சாட்சி சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. (மேற்கண்ட இரண்டு வாகனங்களும் காவல்நிலைய பாதுகாப்பில் இருப்பதாகவும் அந்த இரண்டு வாகனங்களும் நீதிமன்றத்திற்கு போலிசாரால் கொண்டுவரப்படவில்லை என்றும் அறிவார்ந்த அரசுதரப்பு வழக்கறிஞரால் தெரிவிக்கப்பட்டது )

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.</u>**

மறுவிசாரணை இல்லை.

Sd/- **G. Sri Rama Jeyam,**
III Additional District Judge,
Salem